மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 51/1993) @ திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி, ஏற்கப்பட்டது.

7. அறிவிப்பு

பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு, 1993. (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993)-ஐ பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

செல்லுமா செல்லாதா என்றெல்லாம் கேட்டார்களே, இதை ஆய்வு செய்து நிறைவேற்றுவதற்கு ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(அஅ) பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993). மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

@ 30-12-1993-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 2.15

*மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் சட்டமுன்வடிவை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால் இதே சட்டப் பேரவையில் தொடர்ந்து பனைத் தொழிலிலே ஈடுபடக் கூடியவர்களுக்கு வாரியம் அமைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தி பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) பனை வாரியம் தான். பானை வாரியம் அல்ல. பனைவாரியம் தான் சரியாக காதிலே வாங்கிக்கொள்ளுங்கள். (சிரிப்பு) அந்தப் பனைப் பொருளிலே செய்யக்கூடிய கலைப் பொருட்கள் எல்லாம் இன்றைக்கு அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால் நம்முடைய தமிழ்நாட்டிற்கு அன்னிய நிதி கிடைக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பு உருவாகிறது. தென் மாவட்டங்களிலே மட்டுமல்ல. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே நாகை மாவட்டத்திலேகூட பனை மரம் சாலை ஓரங்களிலே போடப்படுகின்றன. இன்றைய தினத்திலே அது பயிராக உருவெடுத்து இருப்பதோடு மட்டும் அல்ல, சாலைகளின் பக்கத்திலே, இருபுறங்களிலே சாலைகளை அரித்துச் செல்லாமல், தார் சாலைகள் உட்கார்ந்து போகாமல், இப்படிச் சாலைகளுக்குக் கூட பனை மரம் வளர்ப்பு என்பது ஒரு நல்ல வளர்ச்சியாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் தொழில் வேலை வாய்ப்பைக்கூட உருவாக்குகிறது. பல்வேறு வீடுகளில், பெண்கள், குழந்தைகள் இரவு நேரங்களிலே இந்தச் சிறு தொழிலிலே ஈடுபடுவதற்கு நல்ல வாய்ப்புகளை உருவாக்குகிறது. ஆனால் இந்த சட்ட முன்வடிவிலே ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். இதிலே தலைவர், துணைத் தலைவர், அலுவலர்கள் ஆகிய தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள் மீது கோர்ட்டிலே வழக்கு தொடரக்கூடாது என்ற ஒரு வரியைச் சேர்த்திருக்கிறார்கள். அன்னிய மூலதனம் கிடைக்கக்கூடிய, பல கோடிக் கணக்கான ரூபாய்கள் வருமானம் வரக்கூடியது இந்த நிறுவனம். இதிலே தலைவராக இருக்கக்கூடியவர்கள்,

@ 30-12-1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

துணைத் தலைவராக இருக்கக் கூடியவர்கள், அலுவலர்களாக இருக்கக்கூடியவர்கள் மீது யாரும் வழக்குத் தொடரக் கூடாது என்று சொன்னால், இதிலே ஒரு முறைகேடு நடந்து விட்டால் இவர்கள்மீது எப்படி வழக்குத் தொடர முடியும்? ஆக, இப்பொழுதே அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, இந்தச் சட்ட விதியிலே அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்து, அதைத் திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று இந்த வாரியத்திலே தலைவரையும், துணைத் தலைவரையும் மெம்பர்களையும் சேர்க்கின்றபோது இந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடியவர்களை, அனுபவம் மிக்கவர்களை இதில் நீங்கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரம் போன்ற உயர்ந்த பண்புகளையும், உயர்ந்த உள்ளமும் உயர்ந்த கொள்கையும் கொண்டு, பனை மரத்தின் உறுதியைப் போன்ற உறுதியான எண்ணமும், கொள்கையும் கொண்ட நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து, அறிவுரைகள் பல வழங்கி இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு முதன்முதலில் நமது தமிழகத்தில் பனைத் தொழில் வளர்ச்சி வாரியம் ஒன்றை அமைத்து இதன்மூலம் இந்த பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சுமார் 7 இலட்சம் பனைத் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 8 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. இதிலே கிட்டத்தட்ட 5 கோடிக்கு மேலாக நமது தமிழகத்தில் மட்டும் உள்ளது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்கள் மற்றும் அந்த ஓலைகளிலிருந்து செய்யப்படும் நவீன பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், பல வகைப்பட்ட முன்னேற்றங்களை இந்தத் தொழிலிலே உண்டு பண்ணவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக நமது தமிழகத்தில் அறிவித்திருக்கிறார்கள். கடந்த 20-4-1992 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் கதர் கிராம தொழில் வாரியத்தின் மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தில் அறிவிக்கப்பட்டு இன்று மத்திய அரசின்கீழ் பம்பாயில் செயல்பட்டுவரும் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு இயற்றப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவில் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஒரு திருத்தத்தை குறிப்பிட்டார்கள்.

பிற்பகல் 2.20

இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் செயல்பாட்டில் இருக்கும் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் கதர் வாரியத்திற்கு என்று இயற்றப்பட்ட சட்டங்களைப் பின்பற்றிதான் இந்தப் பனைத் தொழில்

வாரியத்திற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. எனவே, இதில் ஏதாவது திருத்தம் இருந்தால் அவற்றை அங்கு தெரிவித்து அந்தக் கதர் ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்றுதான் ஏதாவது திருத்தம் செய்து நிறைவேற்றப்படவேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை கருத்தில் கொண்டு தேவையைக் கருதி அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வாரியத்திற்கான இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 35 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 35 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 1. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் திருத்தத்தை மொழியலாம்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause I, in sub-clause (1), *for* '1993' *substitute* '1994'. என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 1 திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS